தரம் 12,13

சகலதவணைகளுக்குமானது

# <u>தமிழ் இலக்கிய வரலாறு</u>

K.Nadarajah, SLTS-I
Tamil Trd,BA,PGDE,MA,PGDSNE,MED
N/Cambridge collage,
Kotagala.

# தமிழ் இலக்கிய வரலாறு

- சங்ககாலம் (கி.பி 1-3 ஆம் நூற்றாண்டு வரையான காலம்)
- சங்கமருவிய காலம் (கி.பி 3-6 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையான காலம்)
- பல்லவர் காலம் (கி.பி 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 9ஆம் நுற்றாண்டின் இறுதி வரையான காலம்)
- சோழர்காலம் (கி.பி 9-14 ஆம் நூற்றாண்டு வரையான காலம்)
- விஜயநகர நாயக்கர் காலம் (கி.பி 14-17 ஆம் நூற்றாண்டு வரையான காலம்)
- ஐரோப்பியர் காலம் (கி.பி 18-19 ஆம் நூற்றாண்டுகளைக் கொண்ட காலம்)
- இருபதாம் நூற்றாண்டு (கி.பி 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து தற்காலம் வரை)

## இலக்கிய வரலாற்றில் கூர்மையாக மனங்கொள்ளவேண்டிய விடயங்கள் பின்வருவன.

- ஒவ்வொரு காலத்திற்குமான பின்னணி.
- குறிப்பிட்டகாலப்பகுதியினுடைய அரசியல்,சமூக,பொருளாதார,கலை,கலாசார, பண்பாட்டுக்கூறுகளை தெளிவாக அறிந்திருத்தல்.
- அக்காலக்கட்டத்தில் எழுந்த நூல்கள் அவை எழுந்த பின்னணியை அறிதல்.
- காலக்கட்ட நூல்களை பொருள்,வடிவ அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்ளல்.
- வகைப்படுத்தப்பட்ட இலக்கியங்களின் பொதுபண்புகளை அறிதல்.
- மேலும் இலக்கியங்களின் பண்புகளை பொருள் அடிப்படை,செய்யுள் அடிப்படை,மொழிமரபு அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்தல்.
- காலக்கட்ட ரீதியாக உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு கொள்ளல்.
- வரலாற்றுக் காலத்தில் முனைப்பு பெற்றுள்ள இலக்கியங்களையும், இலக்கிய கர்த்தாக்களையும் பற்றி கற்றுக் கொள்தல் அவசியமாகும்.

# சங்ககாலம்

- சங்ககால அரசியல்,சமூக,பொருளாதார நிலைமைகளை சுருக்கமாக குறிப்பிட்டு அவை இக்கால இலக்கிய வளர்ச்சி, பொருள் மரபுக்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை எடுத்துக்காட்டுக.
- இக்கால மக்களின் வாழ்க்கை நிலைமைகளை விளக்கிக் காட்டுக.
- சங்ககால இலக்கியங்களை வகைப்படுத்துக.
- இக்கால இலக்கியங்களின் முக்கியபண்புகளைத்தருக.(அகத்திணை,புறத்திணை,தணித்துவ)
- சங்ககால இலக்கியங்களின் பொருள்மரபை எடுத்துக்காட்டி விளக்குக(அகம்,புறம்)
- சங்கங்கள் தொடர்பான முக்கிய செய்திகளைத் தொகுத்து தருக.
- “இக்கால இலக்கியங்களை அகம்,புறம் எனவேறுபடுத்தி நோக்கலாம்” இதற்கான அடிப்படைகளைத் தருக.
- இக்காலத்தில் எழுந்த ஆற்றுப்படை இலக்கியங்களும் அதன் பிரதான பண்புகளும் எவை?

- ஆற்றுப்படை இலக்கியங்களின் அமைப்பை விளக்கி சங்க காலத்தில் அதுபெற்ற வளர்ச்சியினை எடுத்துக்காட்டுக.
- ஏதாவது ஒரு நூலைக் குறிப்பிட்டு விளக்கும்படி கேட்கலாம். (இக்காலத்தில் எழுந்த நூல்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்து அறிதல் அவசியம்)
- உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் பற்றி சுருக்கமாக விளக்குக.
- முதல்பொருள்,கருப்பொருள்,உரிப்பொருள் என்பனபற்றி சுருக்கமாக விளக்குக.
- புறத்திணை இலக்கியங்களில் மன்னர்களுக்கு நல்லறிவூட்ட புலவர்கள் முயன்றவாற்றினை எடுத்துக்காட்டுக.
- "இக்காலம் ஒரு இயற்கை நெறிக்காலம்" என்பதை மெய்ப்பிக்குக.
- இக்கால அரசர்கள்,புலவர்கள்,தெய்வங்கள்,பற்றிய செய்திகளைத் தொகத்துத் தருக.
- சங்க இலக்கியங்களில் காணப்படும் பாத்திரங்கள் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

# சங்கமருவியகாலம்

- சங்கமருவியகாலத்தை வரையறை செய்து இக்கால அரசியல்,சமூக,பொருளாதார நிலைமைகளை எடுத்துக்காட்டுக.
- சங்கமருவிய காலத்தில் அறப்போதனைகள் முன்னெடுக்கப்பட்டதற்கான காரணங்களைத்தருக.
- இக்கால சமய நிலைக்குறித்து விளக்கம் தருக.
- சங்கமருவிய கால இலக்கியங்களை அவற்றின் பொருளடிப்படையில் வகைப்படுத்துக.
- இக்கால இலக்கியங்களின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டி விளக்குக.
- திருக்குறள் எழுந்த காலப்பின்னணியை விளக்கி அதன் அமைப்பை எடுத்துக்காட்டுக.
- காப்பியம் என்றால் என்ன என்பதை கூறி காப்பியங்களின் தொடக்ககாலமாக சங்கமருவிய காலத்தை கூறலாமா? என்பதை விளக்குக.

- பதினெண்மேற்கணக்கு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கிடையேயான வேறுபாடுகளைத் தருக.
- சங்கமருவிய காலத்தில் எழுந்த அகத்திணை இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளைத் தருக.
- சங்ககால சங்கமருவியகால இலக்கிய பண்புகளக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக.
- இக்கால காப்பியங்கள் குறித்து சுருக்கமாக விளக்குக.
- சங்கமருவியகால காப்பியங்களுக்கும் சோழர்காலகாப்பியங்களுக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தருக.
- சங்கமருவிய காலத்தை இருண்டகாலம் எனக்கூறுவது பொருந்துமோ என ஆராய்க.
- "தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியத்தின் தோற்றுவாயாக விளங்குவது சங்கமருவிய காலமாகும்" இக்கூற்றை நியாயப்படுத்துக.
- காரைக்காலம்மையார் மொழிக்கும்,பக்திக்கும் ஆற்றிய பங்களிப்பை எடுத்துக்காட்டுக.

# பல்லவர்காலம்

- பல்லவர்காலத்தை வரையறை செய்து இக்கால அரசியல்,சமூக,பொருளாதார நிலைமைகளை எடுத்துக்காட்டுக.
- பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்திக்காட்டுக.
- இக்கால இலக்கியங்களின் முக்கிய பண்புகளைத்தருக.
- பல்லவர் காலம் பக்தி இலக்கியகாலம் என அழைக்கப்படுவதற்கான காரணங்கள் எவை என எடுத்துக்காட்டுக.
- சங்ககால கைக்கிளை,பெருந்திணை மரபுகள் பல்லவர்காலத்தில் பின்பற்றப்பட்டுள்ளவாற்றை விளக்குக.
- “சங்ககால அகத்திணை இலக்கியத்தின் செல்வாக்கினை பல்லவர் காலத்திலும் காணலாம்” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

- பல்லவர் காலத்தில் எழுந்த பக்திசாரா இலக்கியங்கள் பற்றி கருத்துரை வழங்குக.
- தமிழ் இலக்கிய உலகில் ஆண்டாள் பெறும் முக்கியத்துவம் யாது?
- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மாணிக்கவாசகரின் பங்களிப்பு எத்தகையது?
- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆழ்வார்களினதும் நாயன்மார்களினதும் தமிழ் பணிப்பற்றி விளக்கிக்கூறுக.
- சங்கமருவியகால பல்லவர் கால இலக்கியங்களுக்கிடையிலான வேறுபாடுகளைத் தருக.
- பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்கு ஆழ்வார்ளும் நாயன்மார்களும் கைகொண்ட வழிமுறைகளை எடுத்துக்காட்டுக.
- ‘‘சங்கமருவிய காலத்தில் ஊற்றெடுத்த பக்தி ஆறு பல்லவர் காலத்தில் பெருக்கெடுத்த ஓடியது’’ விளக்குக
- ‘‘சங்கமருவிய காலத்தில் காரைக்காளம்மையாரால் ஏற்றி வைத்த பக்தி தீபம் பல்லவர் காலத்தில் சுடர்விட்டு பிரகாசித்தது’’ விளக்குக.

# சோழர்காலம்

- சோழர்கால அரசியல்,பொருளாதார,சமய,சமூக நிலைமைகளை எடுத்துக்காட்டுக.
- சோழர்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் எவை?

(எல்லா இலக்கியங்களையும் வகைப்படுத்தி விளங்கிக் கொள்ளவேண்டும்.அவற்றிற்குறிய பண்புகளையும் இனங்கண்டு கொள்வது மிக நல்லது பயன்தரும்)

- சோழர்கால இலக்கியங்களின் முக்கிய பண்புகளைத் தருக.
- “சோழர் பெருமன்னர் கால சமூக,அரசியல் வளர்ச்சி இக்கால இலக்கிய வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.”விளக்குக
- இக்கால காவியமரபு பிற்பட்டகால இலக்கியங்களில் பிரதிபலிக்குமாற்றை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.
- சோழர்காலம் காவியகாலம் எனக்கூறுவது பொருந்துமோவென ஆராய்க.
- இக்கால சிற்றிலக்கியங்களின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் அமைப்புகளை சுருக்கமாக விளங்கப்படுத்துக.

(பரணி, உலா, தூது, பிள்ளைத்தமிழ், கோவை போன்றவை)

- இக்கால இலக்கிய கர்த்தாக்களின் இலக்கிய முயற்சிகளை எடுத்துக்காட்டுக.(ஒட்டக்கூத்தர்,திருத்தக்கத்தேவர்,நம்பியாண்டார்நம்பி,செயங்கொண்டார்,கம்பர்)

  "பல்லவர்கால இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் சோழர்காலம் அமைந்தது" இக்கூற்றை நீர் ஏற்பீரா? தக்க சானறுகள் கூறி விளக்குக.

- "சோழர்காலத்தில் பல்துறைசார் இலக்கியங்கள் வளர்சியடைந்தது" விளக்குக.

- பல்லவர்கால பக்தி இலக்கிய மரபு சோழர்கால சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு வழிகாட்டியது என்பதை விளக்கிக்கூறுக.

- பல்லவர்கால பக்தி இலக்கிய மரபு சோழர்கால காப்பியங்களில் செல்வாக்கு செலுத்தியவாற்றை மதிப்பிடுக.

- சோழர்காலம்"ஒருபொற்காலம்,பேரரசுகாலம்,காவியகாலம்,சிற்றிலக்கியகாலம்,சாம்ராஜ்யம்,தனித்தமிழ் மன்னர்காலம்,சக்கரவர்த்திகள்காலம்.சமயபொறைநிகழ்ந்தகாலம்,சைவசித்தாந்தகாலம்" எனக்கூறுவது நியாயமானது. இதனை மெய்ப்பித்துக்காட்டுக.

# விசயநகர நாயக்கர்காலம்

- இக்கால சூழ்நிலையினை மிகசுருக்கமாக அறிமுகஞ்செய்க.
- விசயநகர-நாயக்கர்கால இலக்கியங்களை வகைப்படுத்துக.
- விசயநகர-நாயக்கர்கால இலக்கியங்களின் பண்புகளைத் தருக.
- விசயநகர-நாயக்கர்கால இலக்கியங்களில் இக்கால அரசியல் பொருளாதார சமூகநிலைகளின் செல்வாக்கு எத்தகையது.?
- விசயநகர-நாயக்கர்காலம் பொதுமக்கள் இலக்கிய காலம் விளக்குக.
- விசயநகர-நாயக்கர்காலத்தல் எழுந்தச சிற்றிலக்கியங்களின் பண்புகளைத் தருக.
- விசயநகர-நாயக்கர்காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்களைத் தருக.

- விசயநகர-நாயக்கர்காலம் சோழர்காலத்தின் தொடர்ச்சியாகவும் பிற்பட்ட காலத்திற்கு விடிவெள்ளியாகவும் திகழ்ந்தது இக்கூற்றை விளக்கிக் காட்டுக.
- விசயநகர-நாயக்கர்காலம் ஒரு பிரபந்த காலம் விளக்குக.
- விசயநகர-நாயக்கர்கால பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.
- சோழர்கால இலக்கிய பண்புகளுக்கும் விசயநகர-நாயக்கர்கால இலக்கிய பண்புகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.
- காளமெகப்புலவரின் கவித்தவ ஆற்றலை எடுத்துக்காட்டுக.
- விசயநகர-நாயக்கர்காலம் சொல்லால்,பொருளால்,கருவால் வரட்சியுற்ற காலம் இதனை ஏற்றுக்கொள்ள முடியுமா? உமது கருத்துக்களை பதிவு செய்க.
- விசயநகர-நாயக்கர்காலம் ஒரு தத்துவநெறிக்காலம் விளக்குக.

# ஐரோப்பியர் காலம்

- இக்கால அரசியல்,பொருளாதார,சமய,சமூக,பண்பாட்டு அம்சங்களை சுருக்கமாக வரையரை செய்க.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சி போக்குகளை எடுத்துக்காட்டுக.
- ஐரோப்பியர் கால செய்யுள் இலக்கிய போக்குகளை எடுத்துக்காட்டுக.
- ஐரோப்பியர் கால உரைநடை இலக்கிய வளர்ச்சிப்போக்கு பற்றி ஆராய்க.
- இக்கால நவீன தமிழ் உரைநடை வளர்ச்சிக்கான காரணங்களை தெளிவுபடுத்துக.
- இக்காலத்தில் தமிழ் இலக்கியதுறையில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கூறுக.
- ஐரோப்பியர் வருகையினால் தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
- [illegible] வருகையினால் தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

- ஐரோப்பியர் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.
- சில மேல்நாட்டு அறிஞர்களின் தமிழ்பணியை பதிவுசெய்க.
- பின்வருவன பற்றி சிறுகுறிப்பெழுதுக.

  தமிழ் இலக்கணம்,இலக்கியம்,அகராதி,உரைநடை என்பவற்றிற்கு மேல் நாட்டார் பங்குற்றுதல் எவ்வாறானது?
- உரைநடை வளர்ச்சியினால் தமிழ் மொழியில் எற்பட்ட மாற்றங்கள் எவை?
- மேலைத் தேசத்தவர் வருகையினால் தமிழ் இலக்கியம் வடிவம்,பொருள்மரபில் மாற்றத்தை கண்டது இதனை விளக்குக.
- இக்காலத்தில் பத்திரிகை துறைவளர்ச்சிகண்டவாற்றினை விளக்குக.
- பதிப்புத்துறை தமிழ் இலக்கிய போக்கில் ஏற்படுத்திய தாக்கங்களை குறிப்பிடுக.
- இக்காலத்தில் எழுந்த தொடக்ககால இலக்கிய வடிவங்கள் பற்றி கருத்துரை வழங்குக.

  உதாரணம்- நாவல்,சிறுகதை,கவிதை.

செம்மொழி அந்தஸ்து பெற்ற தலை சிறந்த தமிழுக்கு தலைத் தாழ்த்துவோம்.........